**ஸ்ரீ உ.வே. என். எஸ். ஆர். ஸ்வாமியுடன் அடியேனின் அனுபவங்கள்**

*சோகத்தூர் ராமானுஜ தாஸன்*

सर्वशास्त्रेषु निष्णाता रामानुजबुधेश्वराः । दयन्तां सम्प्रदायस्य धूर्वहा गुणभूषणाः ॥

*அடியேன் முதன்முதலாக ஸ்ரீ உ.வே. என். எஸ். ஆர். ஸ்வாமியை தெண்டன் ஸமர்ப்-பித்தது 1989ம் வருடம், புதுதில்லியில் 'ஸம்ஸ்க்ருதமும் கம்ப்யூட்டரும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்குக்காகச் சென்ற பொழுது தான். இருவரும் ஆர்.கே.புரம் திருவேங்கடமுடை-யான் ஸன்னதியில் தங்கியிருந்தோம். அப்பொழுது பல வித்வான்கள் ஸ்வாமியிடம் வந்து ஶாஸ்த்ர விஷயங்களில் விசாரம் செய்வர். ஸ்வாமி அடியேனை தேவரீர் செய்யும் முயற்சி வியப்பளிக்கிறது, கம்ப்யூட்டரில் ஸம்ஸ்க்ருதத்தைப் பயன்படுத்த முடியுமா என வினவி, கரு-த்தரங்கிலும் அடியேனின் 'ஶாப்தபோத'த்தைப் பற்றிய கம்ப்யூட்டர் செயல் முறையைக் கூர்ந்து கவனித்தருளினார்.*

*பின்னர் 1991ம் வருடம் நாடாளுமன்றத்தில் அடியேன் கம்ப்யூட்டரில் ஸம்ஸ்க்ருதம் விஷயமாக அப்போதைய பிரதமர் ஸ்ரீ. பி.வி. நரஸிம்ம ராவ் முன்னிலையில் விவரிக்கும் போது திருப்பதி ஸம்ஸ்க்ருத வித்யாபீடத்தின் துணைவேந்தராக அங்கு கலந்து கொண்டார்.*

*அதன் பின் திருப்பதி வித்யாபீடத்திற்கு அடியேனை அழைத்து ஶாஸ்த்ரங்களில் பயி-ற்சிக்கு கம்ப்யூட்டர் உதவி எப்படி கொள்ள முடியும் என ஆலோசனை கூறுமாறு நியமித்தார். அடியேனும் பல ஆலோசனைகளை விண்ணப்பித்துக் கொண்டேன். ஸ்வாமியும் உகந்தார்.*

*ஒருமுறை திருப்பதி வித்யாபீடத்தில் பூர்வமீமாம்ஸையின் 15 நாட்கள் பயிற்சிக் கூட-த்தில் ப்ராபாகர மதத்திய ஶாலிகநாதனின் 'ப்ரகரண பஞ்சிகா' என்னும் உயர் க்ரந்தத்தின் சில பகுதிகளை இரண்டு நாட்கள் ஸ்வாமியிடம் கற்கும் பாக்கியம் கிடைத்தது.*

*பின்னர், பெங்களூரின் இந்திய விஞ்ஞானக் கழகத்தில், 'ஸுதர்ஶநம்' என்னும் பெயரில் தர்ஶநங்களைப் பற்றிய உபந்யாஸங்களை கம்ப்யூட்டர் மூலமாக படிப்பிக்கும் முயற்சிக்காக, ஸாதித்தார்.*

*2005ம் வருடம் அடியேனின் திருத்தகப்பனாரின் ஶதமாநோத்ஸவத்திற்காக தர்மவிஷ-யமாக ஒரு வ்யாஸத்தையும் எழுதிக் கொடுத்து அடியேனையும் அனுக்ரஹித்தார்.*

*2011ம் வருடம் மத்திய அரசின் சார்பில் வேதம் மற்றும் ஶாஸ்த்ரங்களின் விஷயமாக அடியேன் மேற்கொண்ட 'தார்க்ஷ்ய' என்னும் கம்ப்யூட்டர் வழியாக கற்பிக்கும் திட்டத்திற்காக ந்யாயஶாஸ்த்ரத்தில் 'ஶாப்தபோதத்தில் முக்ய விஶேஷ்யம்', 'வித்யர்த்த விமர்ஶம், 'வ்யாகரண-த்தில் உணாதி ஸூத்ரங்கள்', மீமாம்ஸையில் 'அபூர்வ மீமாம்ஸா', விஶிஷ்டாத்வைத வேதாந்த-த்தில் 'புத்தி ஸமீக்ஷா' என தர்மபூதஜ்ஞாந ஸ்வரூப விஷயமாகவும் ஐந்து மணிகள் உபந்ய-ஸித்து அனுக்ரஹித்துள்ளார்.*

*2013ம் வருடம் கர்நாடக மாநில அரசின் சார்பில் அடியேன் ஸ்ரீ.உ.வே. லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி இயற்றிய 'மாந-மேய-ரஹஸ்ய-ஶ்லோக-வார்த்திகம்' என்னும் உயர் க்ரந்தத்தின் கம்ப்யூட்டர் மூலமாக ஆய்வு குறித்து நடத்திய கருத்தரங்கிலும் எழுந்தருளியிரு-ந்து, அழகாக உபந்யஸித்து, அடியேனின் முயற்சியை உகந்து ஆஶீர்வதித்தருளினார்.*

*இதைத் தவிர, ஸ்ரீமதஹோபில மடம், ஆண்டவன் ஆஶ்ரமம், பரகால மடம், பௌண்-டரீகபுரம் ஆஶ்ரமம் முதலிய இடங்களில் பல வாக்யார்த்த ஸதஸ்களில் அடியேனை விஷய பரீக்ஷை, ஶோதனம் முதலியவற்றால் அனுக்ரஹித்துள்ளார்.*

*இவ்வாறு ஸமீபகாலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீதேஶிகஸம்ப்ரதாய வித்வான்களில் தலை சிறந்தவரான இந்த ஸ்வாமியின் இழப்பால் வருந்தும் பொழுது அவர் நம்முடன் எழு-ந்தருளிய காலத்தில் பெற்ற அருளாசிகளை நினைத்துத் தேறியிருக்கலாம்.*

शोकहर्तृपुरीयश्रीरामानुजसुधीरिदम् । व्यलेखीद्विदुषां प्रीत्यै महनीयगुणेरितः ॥

சுபமஸ்து.